அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்: 40 /2017
தேதி: 19.03.2017

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் இளைஞரணி செயலாளர்கள் கூட்டம் 19.03.2017 (ஞாயிற்றுக்கிழமை) இன்று காலை 10.00 மணியளவில் சென்னை தலைமை அலுவலகத்தில், மாநில இளைஞரணி செயலாளர் திரு.ஏ.பிரான்சிஸ் அந்தோனிராஜ் அவர்கள் தலைமையிலும், மாநில இளைஞரணி இணைச் செயலாளர் திரு.டி.மகாலிங்கம் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு சமத்துவ மக்கள் கட்சியின் தலைவரும், பொதுச்செயலாளருமான திரு.ஆர்.சரத்குமார் அவர்களும், மாநில பொருளாளர் ஏ.என்.சுந்தரேசன், மாநில துணை பொதுச்செயலாளர்கள் எம்.ஏ.சேவியர், என்.சுந்தர், தலைமைநிலைய செயலாளர் திருமதி.பாகீரதீ, மாநில மாணவரணி செயலாளர் அக்வின் நோயல், மாநில இளைஞரணி துணை செயலாளர் எம்.ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்கள்

இதில் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த இளைஞரணி நிர்வாகிகள் கலந்துகொண்டார்கள்.

<u>இளைஞரணி செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்</u>

1. சென்னை மக்களின் குடிநீர் ஆதாரமான சோழவரம் ஏரி, செம்பரபாக்கம் ஏரி வறண்டு கொண்டிருக்கும் சூழலில், வரும் கோடைகாலத்தை கருத்தில் கொண்டு, மாநில அரசனது மக்களின் குடிநீர் தட்டுப்பாட்டினை போக்குவதற்கு உடனடியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடங்கவேண்டும் என்று மாநில அரசை இந்த கூட்டம் வலியுறுத்துகிறது.

2. சாலை விபத்தில் அகால மரணமடைந்த தமிழகத்தை சேர்ந்த இந்தியாவின் சிறந்த கார் பந்தய வீரர் அஸ்வின் சுந்தர் மற்றும் அவரது மனைவி ஆகியோரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

3. அந்நிய நாட்டு குளிர்பானங்களை முற்றிலும் தடை செய்து நமது இயற்கை பானங்களான இளநீர், பதநீர் போன்றவற்றின் பயன்பாடுகளை ஆதரிக்க தேவையான மானிய உதவிகளை மாநில அரசு செய்திட வேண்டும் என இந்த கூட்டம் வலியுறுத்துகிறது.

4. அத்திக்கடவு-அவினாசி திட்டத்திற்காக ஒதுக்கிய நிதி தகுந்த விளக்கத்தோடு 90 நாட்களுக்குள் திட்டம் காலவரைமுறையுடன் அறிவிக்கப்பட்டு, விரைவில் தொடங்கப்படவேண்டும் தவறும் பட்சத்தில் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் புரட்சி திலகம் அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கும் உண்ணாவிரத போராட்டத்தில் அதிகப்படியான எண்ணிக்கையில் இளைஞரணி நிர்வாகிகளையும் பொதுமக்களையும் கலந்துகொள்ள செய்வது என தீர்மானிக்கப்படுகிறது.

5. நடைபெறவிருக்கும் உள்ளாட்சி மன்ற தேர்தலில், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் அதிக எண்ணிக்கையில் இளைஞரணி நிர்வாகிகள் போட்டியிட வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

6. இளைஞரணி சார்பில் மாநில மாநாட்டினை விரைவில் புரட்சித்திலகம் அவர்கள் தலைமையில் நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

**7.** நமது பாரம்பரிய விளையாட்டான கபடி போட்டியை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்டம் தோறும் இளைஞரணி சார்பில் கபடி போட்டிகளை நடத்துவது என தீர்மானிக்கப்படுகிறது.

நன்றி வணக்கம்

அன்புடன்

**ஏ.என்.சுந்தரேசன்**
மாநில பொருளாளர்